**வெளியீட்டு அடிப்படை உதவி மீதான உலகளாவிய பங்குடமை செயற்திட்டம் - 2016**

---

வெளியீட்டு அடிப்படை உதவி மீதான உலகளாவிய பங்குடமை செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 27 ஆம் திகதிய ரீஎவ் 099870 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

வெளியீட்டு அடிப்படை உதவி மீதான உலகளாவிய பங்குடமை செயற்திட்டத்தின் மாணிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீட்டுரிமையாளர் மட்டத்திலுள்ள உள்ளபடியான மற்றும் புதிய சாக்கடை வலையமைப்புக்களுடன் சாக்கடை வீட்டு இணைப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்தில் குறைந்த வருமான வீட்டுரிமையாளர்களிற்கு அதன் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,559 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.10 மில்லியனாக உள்ளதுடன் அதில், ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2017 திசெம்பர் 31 வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடையளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு

நியமங்களிற்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பீ/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 26 இல் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட ரூபா 99.67 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைமுறை வேலையின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக இலங்கை அரசிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் பிரகாரம் நிதியளிப்பதற்கு இனங்காணப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மானியம் | 5.08 | 583.66 | 400.00 | 1.24 | 182.18 | 1.47 | 212.66 |
| ஜீஓஎஸ்எல் | 6.80 | 835.20 | | 0.68 | 102.73 | 2.59 | 352.16 |
| என்டபிள்யூஎஸ் & டீபீ | 1.04 | 119.46 | 219.35 | 1.28 | 190.07 | 3.01 | 416.01 |
| நலனாளிகள் | 0.18 | 20.68 | - | 0.12 | 18.39 | 0.20 | 29.70 |
| **மொத்தம்** | **13.10** | **1,559.00** | **619.35** | **3.32** | **493.37** | **7.27** | **1,010.53** |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஒதுக்கப்பட்ட ரூபா 583.66 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் மொத்த மானிய ஒதுக்கீட்டில் 29 சதவீதத்தினை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 212.66 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1.47 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பின்னர் 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் முறையே 38.17 சதவீதம் மற்றும் 53.30 சதவீதமாக இருந்தது. 2017 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தின் காலம் நீடிப்புச்செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,268 பயனாளிகளுக்கு மாத்திரம் கழிவகற்றல் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆகையினால் செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு அவற்றின் மீதான விரிவான திட்டத்தின் குறைபாடுகள் காரணமாக, மீதமாகவுள்ள 12 மாதங்கள் காலப்பகுதியின் போது 8,561 பயனாளிகளுக்கான கழிவகற்றல் இணைப்புக்களின் இலக்கினை அடைவதற்கான சாத்தியம் தொலைவாகக் காணப்படுகின்றது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக வழங்கப்பட்ட கழிவகற்றல் இணைப்புக்களின் பௌதீக செயன்முன்னேற்றம் மீதான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கழிவகற்றல் இணைப்புகளின் தன்மை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட கழிவகற்றல் இணைப்புகளின் எண்ணிக்கை | | முன்னேற்றம் |
|---|---|---|---|
| | இலக்கு | உள்ளபடியானது | % |
| நேரடி கழிவகற்றல் இணைப்புகள் | 1,236 | 1,234 | 99.83 |
| மாற்றுவழி கழிவகற்றல் விரிவாக்கங்களின் இணைப்புக்கள் | 392 | 13 | 3.32 |

| | | | |
|---|---|---|---|
| எளிமைப்படுத்தப்பட்ட கழிவகற்றல் விரிவாக்கங்களின் இணைப்புக்கள் | 2,583 | 1,620 | 62.72 |
| புதிய பன்முகப்படுத்தப்பட்ட வலையமைப்புகளின் இணைப்புக்கள் | 565 | 392 | 69.38 |
| தள சுகாதார முன்னேற்றங்கள் | 3,785 | 9 | 0.23 |
| **மொத்தம்** | **8,561** | **3,268** | **38.17** |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மே 16 இல் தள கழிவகற்றல் மேம்படுத்தல்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் 2017 யூன் 30 இல் உள்ளவாறான தெஹிவளை, மொறட்டுவ, கொலன்னாவ மற்றும் ஜா எல ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற 3,785 பயனாளிகளுக்கு அவ்வாறான கழிவகற்றல் வசதிகளினை வழங்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர்களின் திறமையுடைய தொழிலாளர்களின் பற்றாக்குறை மற்றும் சிகிச்சை அலகுகளின் தாழ்ந்த உற்பத்தி இயலளவு போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக செயற்திட்டத்தின் கீழ் செயற்பாடுகள் தாமதமான பௌதீக முன்னேற்றத்தினை காட்டியது. மேலும், ஒப்பந்தகாரரினால் உருவாக்க மற்றும் நிறுவப்பட வேண்டுமென இணங்கப்பட்ட 3,785 சிகிச்சைகளில், 2017 மே 31 வரை வழங்கப்பட வேண்டிய தள கழிவகற்றல் வசதிகளில் 526 சிகிச்சை அலகுகள் நிறுவப்பட்டிருந்தது. மேலும், பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளின் குறைந்த கேள்வி காரணமாக கொலன்னாவ பிரதேச செயலகத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 95 கழிவுநீர் இணைப்புகளின் இலக்குகள் அடைய முடியாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன், 2017 மே 31 வரையேனும் 116 கழிவுநீர் இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 மே 31 இற்கு முன்னர் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் வழக்கமான கழிவுநீர் விரிவாக்கல்களினை வழங்குவதற்கு 2015 யூன் 30 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் 1,475 கழிவுநீர் விரிவாக்கல்களினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் தோல்விகள் காரணமாக, 2017 மார்ச் 31 இல் 220 விரிவாக்கங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) காற்றமுத்த இடஅமைவு, காற்றமுத்த பிரதான மற்றும் புவிஈர்ப்பு கழிவுநீர் குழாய்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மாற்றங்கள் காரணமாக, லுனாவயில் புதிய பன்முகப்படுத்தப்பட்ட வலைப்பின்னல்களுக்கு இணைப்புக்களினை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் குழாய் அமைத்தல் மற்றும் வடிகட்டிகள் நிர்மாணங்கள், கடல் வழி விழகை மற்றும் காற்றமுத்த நிலையம் தொடர்பான சிவில் வேலைகள் 72 சதவீதமான தாமதமான முன்னேற்றத்தினை காட்டியமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, 2016 ஆம் ஆண்டிற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.